DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, KALLAKURICHI**

## MC NO: 9/2024 RW:1

| | | |
|---|---|---|
| Name | - | திரு. சரவணன் |
| Husband Name | - | த/பெ. கலியமூர்த்தி |
| Village | - | வீ.மாமந்தூர் |
| District | - | கள்ளக்குறிச்சி |
| Calling | - | கூலி வேலை |
| Age | - | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the date of 11.02.2026 Chief Examination

**Petitioner Present.**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவின் எதிர்மனுதாரர் ஆவேன். மனு பற்றிய விவரங்கள் தெரியும். நான் இன்று சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன். மேலும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல. எனவே, நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு, மனுதாரின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**No Exhibits.**

## மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கும் மனுதாரர் கவீதாவிற்கும் வீ.மாமந்தூர் கிராமம் சிவன் கோவிலில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்தின் போது சீர்வரிசை செய்தார்களா என்றால் இல்லை. திருமணத்தின் போது எனக்கு 10 சவரன் நகையும் 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசை சாமான்களும் பெண் வீட்டில் போட்டார்கள் என்றால் இல்லை. மனுதாரருக்கு போட்டதை மனுதாரரே எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். எவ்வளவு நகை என்பதும் கூட எனக்கு தெரியாது. சீர்வரிசை சாமான்களும் காவல் நிலையத்தில் வைத்து திருப்பி வழங்கிவிட்டேன். நானும் மனுதாரரும் 4 வருடம் ஒன்றாக குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான். அந்த காலத்திலும் அடிக்கடி அவருடைய அம்மா வீட்டில் தான் இருப்பார். இருவரும் சேர்ந்து தான் மனுதாரரின் அம்மா வீட்டிற்கு சென்று வருவோம் என்றால் சரியல்ல. எனக்கு 18 ஏக்கர் பொது குடும்ப சொத்துக்கள் உள்ளது என்றால் என்னுடைய அப்பா, அம்மா பெயரில் உள்ளது. அதுவும் எவ்வளவு என்று தெரியாது. என்னுடன் பிறந்தவர்கள் 2 சகோதரிகள். நான் ஒரே மகன். மனுதாரருக்கும் எனக்கும் குழந்தை இல்லை. கடந்த 09.09.2022 அன்று மனுதாரரை நானும் என்னுடைய அம்மாவும் சேர்ந்து கொடுமைப்படுத்தியதால் அவர் மருந்து குடித்து தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்றால் மனுதாரர் அப்படி தான் என்னிடம் சொன்னார். உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு மருந்து எதுவும் குடிக்கவில்லை என்று சொன்னார்கள். மனுதாரருக்கு குழந்தை பிறக்கவில்லை என்று நானும் என்னுடைய தாயாரும் கொடுமைப்படுத்தினோம் என்றால் இல்லை. கொடுமைப்படுத்தினோம் என்று மனுதாரர் கள்ளக்குறிச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 2022ம் வருடம் புகார் அளித்து விசாரணைக்கும் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான். அங்கு இருவரையும் சேர்ந்து வாழ்கிறீர்களா என்று கேட்டார்கள். இருவரும் சேர்ந்து வாழ்க்கிறோம் என்று சொன்னோம். வேறு எதுவும் விசாரிக்கவில்லை. குழந்தை இல்லை என்பதற்காக ஆத்தூர், சின்னசேலம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் குழந்தைபேறுக்காக சிகிச்சை எடுத்துகொண்டோம் என்றால் கள்ளக்குறிச்சியில் உள்ள சஞ்சீவி மருத்துவமனைக்கு சென்றோம். அங்கிருந்து சேலத்திற்கு பரிந்துரை செய்தார்கள். சேலத்தில் எந்த மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றால் NOVA மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அங்கு இருவருக்கும் மருந்து மாத்திரைகள் கொடுத்தார்கள். ஆனால் நாங்கள் வாங்கவில்லை. நான் சிகிச்சைக்கு

ஒத்துழைக்காமல் மனுதாரரிடம் வீணாக சண்டை போட்டு பிரச்சனை செய்தேன் என்றால் இல்லை. என் உடன் பிறந்த சகோதரி முத்துலட்சுமியின் மகள் தேசிகா என்ற நர்சிங் படித்த பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்தில் மனுதாரருடன் நான் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. கடந்த 23.06.2024 அன்று 2 வதாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒரு புகார் மனுதாரர் கொடுத்தார் என்றால் நினைவில்லை. 4 முறை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக வந்துள்ளேன். அடிக்கடி வீட்டில் பிரச்சனை செய்துகொண்டு மனுதாரர் என் மீது புகார் கொடுத்துக்கொண்டே இருந்தார். கடந்த 18.07.2024 அன்றும் கொடுத்தார் என்றால் 4 முறை வந்துள்ளேன். அனைத்து புகாரும் தனிக்குடித்தனம் செல்வதற்காக கொடுக்கப்பட்டது தான். சீர்வரிசை சாமான்களை காவல் நிலையத்தில் வைத்து கொடுத்துவிட்டு நகைகளை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் வீட்டை விட்டு செல்லும்போதே நகைகளையும் எடுத்து சென்றுவிட்டார். சின்னசேலம் Union Bank ல் நான் மனுதாரரின் பெயரில் அவருடைய நகைகளை ரூ.2 லட்சத்திற்கு அடகு வைத்தேன் என்றால் இல்லை. மனுதாரர் தான் அடகு வைத்தார். என்னை போன் போட்டு அவருடைய அம்மா வீட்டில் இருந்து நகையை எடுத்து வந்து அடகு வைத்துவிட்டு, என்னை வீட்டிற்கு அழைத்து செல்வதற்கு அழைத்ததால், நான் அங்கு சென்று மனுதாரரை என் வீட்டிற்கு அழைத்து வந்தேன். நான் அந்த அடகு வைத்த பணத்தில் இருந்து ரூ.1,21,000/-ஐ MYV3 என்ற Online App ல் மனுதாரர் பெயரிலேயே Deposit செய்தேன் என்றால் நான் செய்யவில்லை. மனுதாரரே செய்துகொண்டார். மனுதாரருக்கு Online App ல் Deposit செய்வது எல்லாம் தெரியாது என்றாலும், அந்த அளவிற்கு விவரம் இல்லை என்றாலும், நான் தான் செய்தேன் என்றால் சரியல்ல. அதேபோல் மகளிர் உரிமை தொகையையும் மனுதாரர் பெயருக்கு வந்ததை நான் தான் எடுத்து அனுபவித்தேன் என்றால் சரியல்ல. மகளிர் காவல் நிலையத்திற்கு என்னுடைய தாய் தந்தையரை அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல. எல்லோரும் தான் வந்தோம். போலீஸ் விசாரணையிலும் போது நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்து அங்கிருந்து சென்று மாலையில் வருவதாக சொல்லி மீண்டும் வரவே இல்லை என்றால் சரியல்ல. அது பொய். நான் ஓட்டுநர் வேலை செய்து வருவதிலும் மற்றும் பயிர் கூலி செய்வதிலும் எனக்கு மாதம் ரூ.45,000/- வருமானம் வருகிறது என்றால் இல்லை. எனக்கு ஓட்டுநர் உரிமமே இல்லை. காட்டு வேலைக்கு தான் செல்கிறேன். என் குடும்பத்தில் விவசாய வேலைக்காக டிராக்டர்

உள்ளது என்றால் உள்ளது. அந்த டிராக்டரை நான் தான் ஓட்டுவேன் என்றால் இல்லை. மனுதாரர் என்னுடன் இருக்கும்போது அவரும் பயிர் வேலை செய்து வந்தார் என்றாலும், அப்பொழுது டிராக்டர் ஓட்டும்போது அவரும் உடன் இருந்துள்ளார் என்றால் சரியல்ல. விவசாய வேலையும், குடும்பத்தில் ஆடு மற்றும் மாடுகளும் உள்ளது என்றால் சரிதான். மனுதாரரை என் வீட்டில் ஒரு வேலை செய்யும் நபரை போல ஆடு மற்றும் மாடுகளை பராமரிக்க சொல்வேன் என்றால் இல்லை. நாங்கள் இருவரும் குடும்பம் செய்த 4 வருடத்தில் சுமூகமாக தான் இருந்தோம் என்றால் இல்லை. அடிக்கடி சண்டை போடுவார். அந்த விவரத்தை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியிருப்பது போல் மனுதாரர் எனது பெற்றோரை கவனிக்கவில்லை என்பது பொய் என்றால் சரியல்ல. நான் மனுதாரரை ஒரு வேலைக்காரி போல் தான் நடத்தினேன் என்றாலும் மனைவி போல் நடத்தியது இல்லை என்றாலும் சரியல்ல. நான் தான் என்னுடைய பெற்றோரின் பேச்சை கேட்டு 2 வது திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்தில் மனுதாரரை நிராகரித்து வருகிறேன் என்றாலும், அதனால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு HMOP 75/2025 என்ற வழக்கை கள்ளக்குறிச்சி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்ற நடைமுறைகள் எனக்கு தெரியாது. அந்த மனுவில் மனுதாரர் ஆகிய கவிதா தன்னுடைய எதிருரையில் தாக்கல் செய்து என்னுடன் வாழ விருப்பம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். இன்றளவிலும் இருவருக்கும் உள்ள திருமண பந்தம் நிலுவையில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் விவாகரத்து கோரி தான் மனுதாக்கல் செய்யவில்லை. சேர்ந்து வாழ அழைத்து தான் மனுதாக்கல் செய்துள்ளேன். நான் மனுதாரரை காப்பாற்ற கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு போதுமான வசதி உள்ளது என்றாலும், ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் என்னுடன் மனுதாரர் வந்து வாழ்ந்தால் அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொள்கிறேன். அவர் மனுதாரர் தனிக்குடித்தனம் செய்ய அழைத்தாலும் அதற்கும் தயாராக இருக்கிறேன். திருமணம் ஆன நாள் முதல் மனுதாரருக்கு என எந்த தேவைகளையும் நான் செய்ததது இல்லை என்றாலும் அடித்து கொடுமைப்படுத்திக்கொண்டே இருந்ததால் தான் மனுதாரர் சேர்ந்து வாழவிருப்பம் இல்லை என தெரிவித்து எதிருரையும் தாக்கல் செய்துள்ளார் என்றாலும், தற்போது வழக்கிற்காக நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக இருக்கிறேன் என்று

பொய்யாக உறுதியளிக்கிறேன் என்றால் சரி யல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் பிராமண வாக்குமூலத்தில் கண்டுள்ள அம்சங்கள் அனைத்தும் உண்மையல்ல என்றாலும் சரியல்ல. மனுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.